**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC )

| | |
|---|---|
| Case No. | CC No. 80/2013 |
| Deposition of witness for Prosecution | P.W– 10 |
| Name | ராஜேந்திரன், வயது 59 |
| Father Name/Husband Name | நாகரத்தினம் |
| Village | மதுரை |
| Taluk | மதுரை |
| Calling | வட்டார போக்குவரத்து அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of April 2026.

**(A1 – A3 absent. 317 CrPC petition filed and allowed. A4 present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது மதுரையில் வசித்து திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் கோவில்பட்டி போக்குவரத்து துறை பகுதி அலுவலகத்தில் உதவியாளராக 20.07.2009 முதல் 31.01.2013 வரை பணியாற்றி வந்தேன். என்னுடைய பணி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து பதிவெண் வழங்கிய வாகனங்களுக்கு பதிவு சான்று தயார் செய்வது, மோட்டார் வாகன ஆய்வாளர் பெறும் கோப்புகளில் அவர் இடும் உத்தரவின்படி கடிதம் தயார் செய்தல், வாகனங்களுக்கு வரி வசூலித்தல் மற்றும் அது தொடர்பான பணி ஆகியவை ஆகும்.

2 கடந்த 21.04.2010 அன்று எனக்கு மேல் அதிகாரியான மோட்டார் வாகன ஆய்வாளர் மறு பதிவிற்காக அவரிடம் சமர்பித்த வாகன பிரிவில் பதிவு சான்றையும் ஆய்வு செய்த பின்னர் அந்த பதிவு சான்றில் வாகனத்தின் எண். KA 03 MH 4050 என்ற Scorpio வாகனத்தில் பதிவு சான்றில் உள்ள விவரங்களில் எழுத்து பிழை உள்ளதாகவும், அது குறித்து சம்பந்தப்பட்ட பெங்களூர் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு கணினி மூலமாக

இமெயில் அனுப்பவும், பதிவு அஞ்சல் மூலம் கடிதம் அனுப்பவும் உத்தரவிட்டார். அதன்படி நான் கடிதத்தை தட்டச்சு செய்து மோட்டார் வாகன ஆய்வாளரின் ஒப்புதல் பெற்று தபால் மூலம் அனுப்பி வைத்தேன்.

3 வாகனத்தையோ, வாகன உரிமையாளரையோ எனக்கு நேரில் சந்திக்கும் வாய்ப்பு இருக்காது. பின் நாட்களில் அந்த வாகனம் பெங்களூர் கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அந்த வாகனம் மாருதி 800 வாகனமாக பதிவாகியுள்ளதாகவும், மேற்படி வாகனத்திற்கு சமர்பித்த ஆவணங்கள் போலியானதாகவும், அதனை தொடர்ந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவ்வாகனத்தின் பதிவு சான்று சம்பந்தமாக வட்டார போக்குவரத்து ஆய்வாளர் தூத்துக்குடி அவர்களுக்கு தெரிவித்து மேல் நடவடிக்கை மேற்கொண்டார். இவ்வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4 இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் ஜீலை 2010ம் ஆண்டு விசாரித்தார். தூத்துக்குடி RTO இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்ததாக போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நான் பணியில் சேர்ந்த முதல் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாளராக இருந்தேன். எனக்கு மேல் தலைமை எழுத்தர் உண்டு என்றால் சரியல்ல, எனக்கு மேல் அதிகாரி மோட்டார் வாகன ஆய்வாளர் மட்டும்தான்.

5 ஒரு வாகனத்தை பதிவு செய்தோ அல்லது மறு பதிவு செய்தோ அதற்கு எண் கொடுத்த பிறகுதான் கோப்புகள் எனது பார்வைக்கு வரும் என்றால் சரிதான். அலுவலக கோப்புகளை பதிவு சான்றிதழ் வழங்கும் வரை நான் பராமரிப்பேன். அதன் பிறகு பதிவுறை எழுத்தர் பராமரிப்பார். மேற்படி KA03 MH 4050 என்ற Scorpio வாகனத்தின் பதிவு சான்றில் என்ன எழுத்து பிழை இருந்தது என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் என்னிடம் கேட்காததால் நான் சொல்லவில்லை ஆனால் Scorpio என்ற பெயரில் எழுத்து பிழை இருந்தது.

6 பதிவு செய்யபடாத வாகனங்களின் கோப்புகள் எனது பார்வைக்கு வர வாய்ப்பு இல்லை என்றால் சரிதான், ஆனால் மறு பதிவிற்கு வரும் வாகனங்கள் மற்றும் ஆவணங்கள் மோட்டார் வாகன ஆய்வாளரால் சரிபார்க்கப்பட்டு சான்றிதழ் வழங்கிய பின்னர் எனது பார்வைக்கு வரும். வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு ஒதுக்கும் பணியை மட்டும்தான் இந்த வழக்கு சம்பந்தமாக நான் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி Scorpio வாகனத்தின் பதிவு சான்று பேனாவால் எழுதபட்டிருந்ததா அல்லது கணினி தட்டச்சு செய்யபட்டிருந்தா

அல்லது தட்டச்சு செய்யபட்டிருந்தா என்றால் எழுத்து மூலமாக இருந்ததாக எனக்கு ஞாபகம்.

7 இந்தியாவில் மென்பொருளில் முதன்மையான இடம் பெங்களூர் என்றால் சரிதான். பெங்களூரில் RTO அலுவலகம் 1990 களிலிருந்து கணினிமயமாக்கப்பட்டது என்றால் சரியல்ல, 2010 க்கு பிறகுதான் கணினிமயமாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு RTO அலுவலகம் சில மட்டும் கணினிமயமாக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு பெங்களூரு RTO அலுவலகங்களும் மற்றும் தமிழ்நாடு RTO அலுவலகங்கள் 2000 ஆம் ஆண்டும் கணினிமயமாக்கப்பட்டது என்றால் சரியல்ல. கணினிமயமாகுவதற்கு முன்பு வாகனத்தின் பதிவு சான்றிதழ்கள் புத்தகமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் முரண்பாடாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8 போலீசார் விசாரணையில் எந்த தேதியில் பெங்களூரு RTO அலுவலகத்திற்கு மெயில் அனுப்பினேன் என்று அந்த ஆவணங்களை நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான், மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுத்திருப்பார். பெங்களூரு RTO அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதத்தின் அஞ்சலக ரசீது மற்றும் ஒப்புதல் அட்டையை போலீசாரிடம் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அனுப்புகை எழுத்தர் அதை அனுப்பிப்பார். மேற்படி Scropio வாகனம் குறித்து கோவில்பட்டி RTO அலுவலகத்திலிருந்து எந்தவிதமான ஆவணமும் எனக்கு தரபடவில்லை என்பதால் நான் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

9 பதிவு செய்யபடாத வாகனத்திற்கு அறிக்கை பெற எனக்கு அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல, ஏற்கனவே பதிவாகிய வெளி மாநில வாகனங்களுக்கு பதிவு சான்றிதழை சரிபார்ப்பதற்கு எனக்கு பணி உண்டு. 2009, 2010 கால கட்டத்தில் வாகனத்தின் பதிவு சம்பந்தமாக கடிதமோ, மெயிலோ அனுப்ப வேண்டாம் என்றாலும், எங்களது கணினியிலே பதிவு குறித்து தெரிந்து கொள்ளலாம் என்றாலும் சரியல்ல. இந்தியாவில் உள்ள அனைத்து RTO அலுவலகங்களும் தற்போது கணினிமயமாக்கப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2009 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா RTO அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

10. 1 முதல் 3 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையானது 4 வது எதிரி தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.